விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் பட்டாசு தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலைகள் பாதுகாப்பு மற்றும் செயல்பாடு குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் பங்கேற்றார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சோழவந்தான் தொகுதி அலங்காநல்லூரில் சேலம் இளைஞர் அணி மாநில மாநாடு, இல்லம் தேடி இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், தொகுதி பொறுப்பாளர் சம்பத், இளைஞர் அணி மாநில துணை செயலாளர் இன்பாரகு, பேரூர்கழக நிர்வாகிகள் ரகுபதி, ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், சாமிநாதன் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனையின்படி

மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்கள் போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்பு !

அயலக தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதம்!

திருப்பூர், அக்.19- உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.

இஸ்ரேல் - பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிர மடைந்து வரும் நிலையில் தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கித் தவிக்கின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அங்குள்ள தமிழர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் உதவி எண்கள் வெளியிட்டு அவர்களது விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடமும், இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகத்திடமும் பகிரப்பட்டு அவர்களை தாயகம் மீட்கும் பணியைச் செய்து வருகிறோம் மேலும் கைபேசி புலனக் குழு (வாட்சப் குழுக்கள்) அமைக்கப்பட்டு அங்குள்ள தமிழர்களின் நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் நாட்டில் சிக்கித் தவித்த தமிழர்களில் தாயகம் திரும்பு வதற்காக பதிவு செய்த நபர்களில் கோயம்புத்தூர், திருவாரூர், கடலூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் ஒன்றிய அரசின் ஆபரேஷன் அஜய் திட்டம் மூலம் முதற்கட்டமாக 12.10.2023 அன்று இஸ்ரேலில் இருந்து புறப்பட்டு சிறப்பு விமானத்தில் 13.10.2023 அன்று காலை 6 மணிக்கு புது டெல்லி வந்தடைந்தனர். புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ் நாடு அரசின் அயலக நலத்துறை சார்பில் வரவேற்பு மையம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்துள்ளோம். மேலும் தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு 14 நபர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 7 நபர்கள் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர்.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 14 தமிழர்களையும், தமிழ் நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பாராளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி, அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் ஆகியோர் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல வாகன வசதி ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தோம்.

கோயம்புத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 7 தமிழர்களையும், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார். உலகத் தமிழர்கள் மீது அளவற்ற பாசமும், நேசமும் கொண்ட நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி மத்திய தரைக்கடல் வாழ் தமிழர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வர கண் துஞ்சாது பாடுபட்டு வருகிறோம் என அயலக தமிழர் நலவாரியத் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி மாநில செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் கூறினார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். (e) 71/2023 நாள். 17.10.2023

வ.எண்.	பணியின் விபரம்	மொத்த பணிகளின் எண்ணிக்கை	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம்
1	வார்டு எண். 7,8,9,11,25, 27,28,43,50,56,57,58, 59,60,61,62,68,69, 70க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல்	23 பணி	07.11.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock)	08.11.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock)

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் –1, தொலைபேசி எண். 0422 2396026. Email: commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 559/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 17.10.2023

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி, விருதுநகர் ரோட்டரி சங்கம் மற்றும் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து கோவில்பட்டி பெண்கள் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடத்திய இலவச கண் சிகிச்சை மருத்துவ முகாமை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் துவக்கி வைத்தார். உடன் கோவில்பட்டி நகர்மன்ற தலைவர் கருணாநிதி, கோவில்பட்டி மத்திய ஒன்றிய தி.மு.க. செயலாளர் பீக்கிலிப்பட்டி முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், புத்தேந்தல் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் புதியதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டடத்தை திறந்து வைத்தார். உடன் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், இராமநாதபுரம் நகர் மன்ற துணைத் தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில் – தனியார் பட்டாசு ஆலைகளில் தீ விபத்து!

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.19 - விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்கள், நேற்று முன்தினம் இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், மாரனேரி கிராமம், கிச்சநாயக்கன்பட்டி மற்றும் சிவகாசி வட்டம், மங்களம் கிராமம் ஆகிய இரு வேறு இடங்களில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலைகளில் 17-10-2023 அன்று எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் 11 பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்டத்தில்

கழகப் பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில்!

தேனி, அக். 19- கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அறிவிப்பின் படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தி.மு.க. பொறியாளர் அணி நடத்தும் பொறியியல் மாணவர்களுக்கான மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப் போட்டியின் பகுதியாக தேனி வடக்கு மாவட்டக் கழகப் பொறியாளர் அணி சார்பாக போடி அரசு பொறியியல் கல்லூரியில் தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் தலைமையிலும் போடி மேற்கு ஒன்றிய செயலாளர் லட்சுணன் போடி அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

பேச்சுப் போட்டியில் பல நூறு மாணவர்கள் பங்கு பெற்றனர். போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு தொகையாக முதல் பரிசாக ரூபாய் 10,000, இரண்டாம் பரிசாக ரூபாய் 5,000 மற்றும் மூன்றாம் பரிசாக 3,000 வீதம் இரண்டு தொகுதி என மொத்தமாக 6 வெற்றியாளர்களுக்கு பரிசு தொகை, நினைவு பரிசு, சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவற்றை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் வழங்கினார். நிகழ்ச்சியில் , தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, போடி நகராட்சி தலைவர் ராஜேஸ்வரி சங்கர், போடி நகரச் செயலாளர் புருஷோத்தமன், தலைமை செயற்குழு உறுப்பினர் சங்கர், பொதுக்குழு ராஜாரமேஷ் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர் முத்துகுமார், மாவட்ட தலைவர் அமர்நாத், மாவட்ட துணை தலைவர் பாண்டி கணேஷ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் உதயன் ராயேஸ் வரன், தினேஷ், ராம்ஜி, ராஜ்குமார், சந்தீப் ஆகியோர் மாவட்டப் பொறியாளர் அணி சார்பாக ஏற்பாடு செய்தனர். போட்டியில் போடி அரசு பொறியியல் கல்லூரி, கலா பாண்டியன் பாலிடெக்னிக், கம்மவர் இன்ஜினியரிங் கல்லூரி, நாடார் சரஸ்வதி இன்ஜினியரிங் கல்லூரி, அரசு ஐ.டி.ஐ. கல்லூரி, அரசு பாலிடெக்னிக், தேவாங்கர் பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய கல்லூரி மாணவர்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர். அதிக மாணவர்கள் பங்கு பெற்ற கல்லூரிக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்டம் வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி ஏற்பாட்டில் கலைஞர் அவர்களின நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பேச்சுப்போட்டி போடியில் உள்ள பொறியியல் கல்லூரியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத்தமிழ்செல்வன் தலைமையில் நடைபெற்றது மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், நகர செயலாளர் புருஷோத்தமன், தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி, வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் முத்துகுமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

திருநின்றவூரில் காலை உணவுத் திட்டம்! சா.மு.நாசர் ஆய்வு!

திருவள்ளூர் அக் 19 - தமிழ்நாடு அரசின் காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தி அனைத்து தொடக்க பள்ளிகளிலும் செயல் படுத்தப்பட்டுள்ளது.. இந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி அடுத்த திருநின்றவூர் கோமதிபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. காலை உணவுத் திட்டத்தை தரம் மற்றும் தயாரிக்கும் முறைகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்த அவர், காலை உணவுத் திட்ட ஆய்வு குறித்து படிவம் பூர்த்தி செய்தார்.

இதனை தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறையை ஆய்வு மேற்கொண்டார் அதோடு கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டி தர ஆசிரியர்கள் கோரிக்கையை சட்ட மன்ற நிதியில் கட்டித் தருவதாக உறுதியளித்துள்ளார் .

விளாத்திகுளம் வட்டம், குளத்தூரில் இந்து நாடார் நடுநிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்கம் சார்பாக நடைபெற்ற பள்ளி நூற்றாண்டு விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க் கண்டேயன் கலந்து கொண்டு புதுப்பிக்கப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வில் முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி, பள்ளி தலைமை ஆசிரியை மரியராஜசெல்வி, வட்டார கல்வி அலுவலர் சரளா, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல், குளத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் மாலதி செல்வபாண்டி, விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கனகராஜ், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட ஆசிரிய ஆசிரியைகள், மாணவ – மாணவிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.